Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 25, 2023

திங்கட்கிழமை, செப்டெம்பர் 25, 2023 | ஒளி: 09 கதிர்: 091 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## நேற்று திரும்பியவர் நாளை பயணம்



ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை (24) நாடு திரும்பிய நிலையில், நாளை செவ்வாய்க்கிழமை (26) ஜேர்மனிக்கு பயணமாகவுள்ளார்.

தொடர்ச்சி P2

ஒடுக்குமுறை சட்டம் நிறைவேறினால்

# 21/4 சூத்திரதாரியை கூட விசாரிக்க முடியாது



சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒடுக்குமுறை சட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்க தயாராகி வருவதாகவும், இந்த சட்டங்கள் நிறைவேறினால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளாக செயற்பட்டவர்களைக் கூட விசாரிக்க முடியாது போகும் என்றும், அரசியல் சதிகளை கண்டு பிடிக்க முடியாது போகும் என்றும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நிகழ் நிலைக் காப்பு என்ற பெயரை முன்னிலைபடுத்திக் கொண்டாலும் அதில் எந்தப் பாதுகாப்பும் இல்லை என்றும், அதில் அடக்குமுறைகளே இருப்பதாகவும், பொதுமக்களின் குரல்களையும், எதிர்க்கட்சியை அடக்குவதுமே இதன் நோக்கம் எனவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



இந்தநிலை நீடித்தால் எதிர்காலத்தில்

## எமது கைகளில் இருந்து கிழக்கு மண் விடுபடும்

■ பேரின்பராஜா சபேஷ்

கிழக்கு மாகாணத்திலே விகிதாசாரத்தில் முஸ்லீம்கள் மார்தட்டிப் பேசுகின்றார்கள் என்றும் இந்தநிலை நீடித்தால் எதிர்காலத்தில் கிழக்கு மண் எமது கைகளில் இருந்து விடுபடக் கூடிய வாய்பப்பு இருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப்பெற வேண்டும்

### சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அறிக்கை

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சம்பந்தப்பட்ட இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேறினால்

## தமிழர்களுக்கு மீண்டுமோர் இன அழிப்புக்கு வழி திறக்கும்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேறினால் தமிழர்களுக்கு மீண்டுமோர் இனவழிப்புக்கு வழி திறக்கும் என்றும் அதைத் தடுத்து நிறுத்த ஒன்றிணைவோம் என்றும் வடக்கு மாகாணசபை முன்னாள உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் தெரிவித்திருந்தாவது,

தொடர்ச்சி P2

## மனைவியின் கத்திக்குத்தில் கணவன் பலி

■ டி.சந்ரு, செ.திவாகரன்,ஆ.ரமேஸ்

மனைவி, கணவனை கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 28பி விஜிதபுர பகுதியில் சனிக்கிழமை (23) இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

விஜித்தபுர மார்காஸ்தோட்டத்தில் தனது வீட்டில் வைத்து கணவன் மனைவிக்கிடையே இரவு 11 மணியளவில் வாக்குவாதம் எழுந்துள்ளதை தொடர்ந்து கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.



தொடர்ச்சி P2



## வட்டியுடன் வங்கதேசத்துக்கு கடன் செலுத்தியது இலங்கை

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாணய மாற்று ஒப்பந்தத்தின் மூலம் பங்களாதேஷிடம் இருந்து பெறப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கை செலுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2





ஐஎம்எப் 2ஆம் தவணைக்கான

## ஒப்பந்தம் நாளை கைச்சாத்தாகும்

சர்வதேச நாணய நிதியத்தின் சுமார் 338 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான இரண்டாவது தவணைக்கான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில் அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் நாளை செவ்வாய்கிழமை (26) கைச்சாத்திடவுள்ளன

தொடர்ச்சி P2

## சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது



பல்பொருள் அங்காடிகளிலோ அல்லது வேறு கடைகளிலோ பொருட்களைத் திருடும் நபர்கள் மீது தாக்குதல் நடத்தப்படாது அவர்களைப் பற்றி அருகில் உள்ள பொலிஸாருக்கு அறிவித்து அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் பொலஸ் பேச்சாளருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



## தியாக தீபம் திலீபனுக்கு சந்தோஷ் நாராயணன் அஞ்சலி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு தனது பாரியாருடன் சென்று அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (24) வருகை தந்த சந்தோஷ் நாராயணன், யாழ்ப்பாணத்தை சேர்ந்த கலைஞர்களை யாழில் உள்ள விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2



## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து இலங்கைக்கு 2 கொடுப்பனவுகள்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கையின் கடற்பகுதிக்கு ஏற்பட்ட சேதத்துக்கான இடைக்காலக் கொடுப்பனவாக இரண்டு கொடுப்பனவுகள் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## 957 வைத்தியர்கள் விலகியுள்ளனர்


### ஐஎம்எப் குழுவுடன் இன்று பேச்சு

5 வருட சம்பளம் இல்லா விடுமுறை பெற்று வெளிநாடு செல்வதற்காகவே பெரும்பாலான வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளதாகவும் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 957 வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அங்காடியில் பெண்ணுக்கு அடி ஊழியர்கள் எழுவர் சிக்கினர்

பொரளை பகுதியிலுள்ள பல்பொருள் அங்காடியொன்றில் பெண் வாடிக்கையாளர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த அங்காடியில் கடமையாற்றும் 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



தொடர்ச்சி P2

## எம்.பியின் மாமனாரை சுட்டவர்கள் சிக்கவில்லை

டி.வி.சானக எம்.பியின் மாமனாரும் காலி நகரத்தின் பிரபல ஆடை வர்த்தகருமான லலித் வசந்த சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து சந்தேகநபர்கள் எனவும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரித்தார்.

காலி நகரில் ஆடையகம் நடத்திவரும் 50 வயதுடைய வர்த்தகர், காலி டிக்சன் வீதியால் சனிக்கிழமை (23) காரில் பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் சுடப்பட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 21/4 சூத்திரதாரியை கூட விசாரிக்க முடியாது

மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள்,மகளிர் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (24) நடந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கென ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளதாகவும், அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதும் நீக்கப்படுவதும் ஜனாதிபதியாலே என்றும், தாம் கூறும்படி செயல்படாவிட்டால், அந்த உறுப்பினர்கள் நீக்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

தமக்கு நட்பாக செயற்படும் அடியாட்களை நியமித்து தனது பதவிக்கும், தனக்கும், தனக்கு நெருக்கமானவர்களுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

இந்த சட்ட மூலத்துக்கு ஏமாந்து விடக்கூடாது என்றும், ஒளிபரப்பு அதிகார சபை சட்டம் குறித்து கனம் நீதிமன்றம் கூட கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை தேவை என்றாலும், அதைச் செய்வதற்கான அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்திற்கு இல்லை என்றே கூறியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயர் நீதிமன்றத்தின் கனம் நீதியரசர்கள் வழங்கிய முந்தைய தீர்ப்புகளுக்கு முரணாக தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள ஊடக அடக்குமுறை சட்டத்திற்கு எந்த செல்லுபடி தன்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இந்த ஆணைக்குழு நீதிமன்றத்தின் அதிகாரத்தை கூட விஞ்சுவதாகவும், இது இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்றும், 230 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பாகிஸ்தானில் இதுபோன்ற சட்டத்தை அறிமுகப்படுத்த இம்ரான் கான் தயாராக இருந்தாலும் இணைய சேவை வழங்குநர்கள் நாட்டை விட்டு வெளியேற எடுத்த தீர்மானங்களால் அவர் அதை வாபஸ் பெற நேரிட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த சட்டத்தில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரம் உள்ளதால் இணையதள மையங்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாகவும், முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், கூகுள் போன்ற நிறுவனங்கள் கூட இதன் ஆபத்துக்கள் குறித்து எச்சரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் டிஜிட்டல் பொருளாதாரத்தை கொண்டு வருகிறோம் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு இணையத்தையும் சமூக ஊடகங்களையும் கட்டுப்படுத்த முயல்கிறது என்றும், ஜனாதிபதி பட்டம், பதவியையும் பாதுகாக்கவே இவை அனைத்தும் செய்யப்படுகின்றன என்றார்.

தங்களுக்குப் பிடிக்காத கருத்துக்களை முற்றாக ஒதுக்கிவிட்டு அரச பயங்கரவாதத்தின் ஊடாக ஊடகங்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இவ்வாறான சட்டங்களால் எந்த புதிய தொழில்நுட்பமும் நம் நாட்டிற்குள் வராது என்றும்,அன்னிய நேரடி முதலீடு கூட இழக்கப்படும் என்றும்,இந்தச் சட்டத்தின் மிகத் தெளிவான நோக்கம் மக்களின் குரலை அடக்கி ஜனநாயக உரிமையை அழிப்பதாகும் என்றும், பல்வேறு மாற்றுக் கருத்துக்களை அடக்கி ஒடுக்குவதாகவும் என கூறினார்.

அரசாங்கத்திற்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை தண்டிக்கவும்,கருத்து சுதந்திரம்,சிந்தனை சுதந்திரம்,ஒன்று கூடும் சுதந்திரம் ஆகியவை இல்லாதொழிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் சர்வாதிகாரத்திற்கோ எதோச்சதிகாரத்திற்கோ இடமில்லை என்றும், அடக்குமுறைக்குப் பதிலாக, மக்களுக்கு சுதந்திரமும் உண்மையை அறியும் உரிமையும் இருக்க வேண்டும் என்றார்.

## நேற்று திரும்பியவர் நாளை பயணம்

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பேர்லின் நகருக்கு செல்லவுள்ள ஜனாதிபதி பேர்லின் குளோபல் உரையாடலில் பங்கேற்கவுள்ளதுடன், உரையாடல் அமர்வின் முதல் நாளில் ஆரம்ப உரையை நிகழ்த்தவுள்ளார்.

பெர்லின் குளோபல் உரையாடல் என்பது தற்போதைய புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் ஜேர்மனியின் உயர்மட்ட உலகளாவிய முயற்சியாகும்.

ஜேர்மனிய சான்சிலர் ஒலாஃப் ஷால்ஸ், ஐரோப்பிய சபைத் தலைவர் சார்லஸ் மைக்கேல் மற்றும் பெல்ஜிய பிரதமர் அலெக்சாண்டர் டி குரூ இந்த கூட்டத்தில் பங்கேற்க உள்ளதுடன், ஜேர்மன் விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி எதிர்வரும் சனிக்கிழமை (30) நாடு திரும்பவுள்ளார்.

இன்றைய (25) அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கவுள்ள ஜனாதிபதி, கொழும்பில் இருக்கும் போது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை சந்தித்து நீட்டிக்கப்பட்ட நிதிவசதியின் இலங்கைக்கான இரண்டாவது தவணை பற்றியும் கலந்துரையாடவுள்ளார்.

## எமது கைகளில் இருந்து கிழக்கு மண் விடுபடும்

கல்முனை - பாண்டிருப்பில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“இந்த நாட்டிலே தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகளிடமும் மக்களிடமும் ஒற்றுமை இல்லை என்ற ரீதியில் ஆபத்தான நிலையில் அழிவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கின்றோம்.

இந்தியாவிலே சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். புலம்பெயர் தேசங்களிலே இலங்கைத் தமிழர்கள் சுமார் இருபது இலட்சம் பேர் வரை வாழ்கின்றார்கள். இந்த நிலையில் இங்கு எமது எதிர்காலம் எங்கே போய் முடியும்.

கிழக்கு மாகாணத்திலே விகிதாசாரத்தில் முஸ்லீம்கள் மார்தட்டிப் பேசுகின்றார்கள். இந்தநிலை நீடித்தால் எதிர்காலத்தில் கிழக்கு மண் எமது கைகளில் இருந்து விடுபடக் கூடிய வாய்பப்புதான் இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள எவ்வாறு இந்த நாட்டிலே வாழப்போகின்றோம் எமது மக்களுக்கான தீர்வு என்ன என்ற விடயத்திலே நாங்கள் தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

எந்த சந்தர்ப்பத்திலும் அந்த ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொள்வார்கள். அதிலும் அதிகம் பாதிக்கப்படப் போகின்ற மாவட்டங்களாக அம்பாறை திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## தமிழர்களுக்கு மீண்டுமோர் இன அழிப்புக்கு வழி திறக்கும்

“1979 ஆண்டு தற்காலிக சட்டமாக பாராளுமன்றத்தில் 6/5 பெரும்பானமையுடன் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்களின் விடுதலை உணர்வையும் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதம் என முத்திரை குத்தி அடக்கி 2009 மே 18 மௌனிக்க வைத்தது.

பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் உரிமைக்காக போராடிய தமிழர்களை அடக்கியும் கொன்றும் வலிந்து காணாமல் ஆக்கியும் ஆண்டுக் கணக்காக அப்பாவிகளை சிறைகளில் அடைத்தும் வேடிக்கை பார்த்தது சிங்கள பேரினவாத அரச பயங்கரவாதம்.

2009 வரை தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கிய பயங்கரவாத தடைச்சட்டம் 44 ஆண்டுகளை கடக்கும் நேரத்தில் அதன் வடிவத்தை சர்வதேச அழுத்தங்களின் பிரகாரம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் எதிர்ப்புக்கள் மத்தியில் மீண்டும் செப்டெம்பர் 15 வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் உள்ளடக்கம் நாட்டில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்த இருந்தாலும் உத்தேச பயங்கவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேறினால் பெரியளவில் தமிழர்களே பாதிப்பைச் சந்திக்கவுள்ளனர்.

விடுதலைப் போராட்டம் சார்பான நினைவேந்தல்கள் மற்றும் தமிழர்களின் இருப்பை அரச இயந்திரம் அபகரிக்கும் போது அரசாங்கத்தற்கு எதிராக போராடும் மக்களின் ஜனநாயக போராட்டங்கள் புதிய சட்டத்தில் பயங்கரவாதமாக பார்கப்படுகின்றது.

## மனைவியின் கத்திக்குத்தில் கணவன் பலி

அதன்போது மனைவியால் மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்துக்கு இலக்காகிய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 33 வயதுடைய பஹிதரன் சந்திரசேகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். அத்துடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான பாத்திமா ரிஸ்வானாவை கைது செய்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டு சட்டமூலங்களையும்...

மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்து தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தில் கவனத்திற்கொள்ள ப்படவில்லை எனவும் மக்களின் கருத்துகளைப் பெறாமல் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் ஊடாக மக்களுக்கு பொறுப்புக்கூறுதல், வெளிப்படை த்தன்மையுடன் செயற்படல் என்பவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம், தவறான அறிக்கைகள், அதனுடன் தொடர்புடைய தவறான விளக்கங்கள் ஆகியவற்றின் வரையறைகள் இரண்டு சட்டமூலங்களிலும் மிகவும் சிக்கலானதாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பான செயற்பாடுகள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை உருவாக்கி , கடுமையான சட்டங்களைத் திணிக்கும் இந்த சட்டமூலங்கள் விரும்பத்தகாத, தன்னிச்சையான முயற்சி என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களும் நீதித்துறையின் விடயங்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுவதாகவும் மக்களின் மீற முடியாத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சட்ட வல்லுநர்களுக்கு இருப்பதையே அந்த அறிக்கையில் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

ஒன்றுகூடல், பேச்சு, கருத்து மற்றும் சிந்தனை சுதந்திரத்தை பறித்து, நிறைவேற்று அதிகாரத்திற்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கும் இத்தகைய சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறையாண்மையை ஆக்கிரமிப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தியாக தீபம் திலீபனுக்கு சந்தோஷ் நாராயணன் அஞ்சலி

அதேவேளை சந்தோஷ் நாராயணனின் மனைவி யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியை சேர்ந்தவர் ஆவார். சந்தோஷ் நாராயணன் யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் பெரியளவிலான இசை ன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து...

8 இலட்சத்து 78 ஆயிரத்து 650 அமெரிக்க டொலர்கள் மற்றும் 1 கோடியே 63 இலட்சம் இலங்கை ரூபாய் கொடுப்பனவுகளே வழங்கப்பட்டுள்ளன.

கப்பல் விபத்தால் நாட்டின் கடற்கரையை சுத்தப்படுத்துவதற்காக இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் செலவீனம் மற்றும் மீனவர்களுக்கான கொடுப்பனவாக இந்த தொகை கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் கப்பல் உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் காப்புறுதியாளர்களின் பிரதிநிதிகளுக்கும் 2023 ஆம் ஆண்டு ஜூலை 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் இடையில் நடைபெற்ற சந்திப்புகளின் போது காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

## ஒப்பந்தம் நாளை கைச்சாத்தாகும்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ள நிலையில், அரசாங்கத்தின் சார்பில் உடன்படிக்கையை அவர் இறுதி செய்யவுள்ளார்.

நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மதிப்பாய்வின் ஒரு பகுதியாக கடந்த வாரம் விவாதங்களைத் தொடங்கிய ஐஎம்எப் குழு ஆரம்பநாளில் சில உடன்பாடுகளை எட்டியது.

ஜனாதிபதியின் அலுவலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தனர்.

சீர்திருத்தங்கள் மற்றும் இலக்குகளை அடைவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரித்ததுடன், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டுமெனவும் ஐஎம்எப் குழு சுட்டிக்காட்டியது.

## 957 வைத்தியர்கள் விலகியுள்ளனர்

நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்கள் தொடர்பில் இன்று திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக சங்கத்தின் செயலாளர், வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பதவி விலகிய வைத்தியர்கள் பலர் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுகாதார துறையில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஓய்வுபெற்ற வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தி நிபுணர்களைகளை சேவைக்கு மீண்டும் அழைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகளவான வைத்தியர்கள் சேவையை விட்டு வெளியேறியதாலும் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெற்று நாடு திரும்பாததாலும் பல அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுகளில் உள்ள உள்ள வைத்திய அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் விடுமுறைகளை இரத்து செய்யவதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது

பொருட்கள் திருட்டு குறித்து விசாரணை நடத்த பொலிஸார் இருக்கும் போது, பொருட்களை திருடிய குற்றத்திற்காக யாரையும் தாக்க முடியாது என்றார்.

சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு யாரையும் தாக்க எவருக்கும் உரிமை இல்லை எனவும், இது தொடர்பில் பல்பொருள் அங்காடிகளின் முகாமையாளர்கள் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொரளை கோட்டே வீதியிலுள்ள பல்பொருள் அங்காடியில் பொருட்களை திருடிய யுவதியை ஊழியர்கள் குழுவொன்று தாக்கும் காணொளி சமூக ஊடகங்களிலும் ஊடகங்களிலும் பரவி வருவதாகவும், தாக்குதல் சம்பவத்தை மன்னிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடையில் யாரேனும் பொருட்களை திருடிச் சென்றதாக சந்தேகம் ஏற்பட்டால், அவர்களை தாக்குவது மாற்று வழி அல்ல என்றும், அந்த நபரை பிடித்து பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

## வட்டியுடன் வங்கதேசத்துக்கு கடன் செலுத்தியது இலங்கை

கடைசி தவணையாக, இலங்கை வியாழன் அன்று சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் கடனுக்கான வட்டியாக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு வருட காலப்பகுதிக்கான கடனை இலங்கை பெற்ற நிலையில், மோசமான பொருளாதார நெருக்கடியால் நாடு கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதுடன், அப்போதைய அரசாங்கம் வங்குரோத்து நிலையை அறிவித்தது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், கடந்த 12 மாதங்களில் இலங்கையின் பொருளாதாரம் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதுடன், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளன.

இந்நிலையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பங்களாதேஷிடம் இருந்து பெறப்பட்ட கடனை இலங்கை செலுத்தி முடித்துள்ளது.

பங்களாதேஷ் வங்கியின் கூற்றுப்படி, இலங்கை ஆரம்பத்தில் ஓகஸ்ட் 20 அன்று 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஓகஸ்ட் 31 அன்று, அது 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திருப்பிச் செலுத்தியது.

கடந்த வியாழக்கிழமையன்று, இலங்கை மேலும் 50 அமெரிக்க டொலர்கள் மற்றும் வட்டி நிலுவைத் தொகையை திருப்பிக் கொடுத்ததையடுத்து, கடனை செலுத்தும் பணி நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அங்காடியில் பெண்ணுக்கு...

பெண் வாடிக்கையாளர் ஒருவர் கொடூரமாக தாக்கப்படும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக ஊடகங்களில் வைரலானதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் இந்த சம்பவம் செப்டம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக முதலில் தெரிவிக்கப்பட்ட போதும் பொரளையிலுள்ள விற்பனை நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளதாக பின்னர் தெரியவந்துள்ளது.

கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த அங்காடி நிர்வாகம் இதற்கு முன்னர் அறிவித்திருந்தது.

## எம்.பியின் மாமனாரை சுட்டவர்கள் சிக்கவில்லை

காரில் சாரதி இருக்கையில் அமர்ந்திருந்த அவர் மீது, ரி56 ரக துப்பாக்கியால் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது உடலில் 15 தோட்டாக்கள் பாய்ந்ததாகவும் தெரிவிக்கப்படும் நிலையில், காலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களின் எதிர்ப்பை செந்தில் சந்திப்பார்

## இம்ரான் எம்.பி எச்சரிக்கை

அபு அலா

திருகோணமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் எடுத்த ஒரு தலைபட்சமான முடிவு அம்மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால், இவ்விவகாரம் தொடர்பில் உடன் மீள்பரிசீலனை ஆளுநர் செய்யவேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்தார்.


திருகோணமலை மாவட்ட மீனவ குழுக்களுக்கு இடையில் கடந்த சில தினங்களாக நிலவும் முறுகல் நிலை தொடர்பாகவும்,அது குறித்து ஆளுநர் எடுத்த தீர்மானம் குறித்தும் கருத்து தெரிவிக்கும் போதே மகரூப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுருக்குவலையைப் பொறுத்தவரை அனுமதிக்கப்பட்ட, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வகையான வலைகள் உள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் உள்ளது.

இதில் சட்டரீதியாக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலை மூலம் கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5000 க்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

எனினும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலைக்கும் அனுமதிப்பத்திரம் வழங்க முடியாத சுருக்கு வலைக்கும் வித்தியாசம் அறியாத ஆளுநர், தற்போது சுருக்கு வலை என்பது சட்டவிரோதமான ஒன்று என்ற நோக்கில் ஒரு தலைபட்ச முடிவை எடுத்து திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியை செய்துள்ளார்.

அங்கு இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாகவே அந்த முறுகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இருபக்க நியாயங்களையும் கேட்ட பின்பே தீர்மானத்திற்கு வர வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளார்.



# “ஆளுநர் உடந்தையாக இருக்கக் கூடாது”

பு.கஜிந்தன்

மாகாண அதிகாரம் மத்திக்கு செல்வதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாததோடு வடமாகாண ஆளுநர் அதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது என வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் சனிக்கிழமை (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி பதிலளிக்கும் போதே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஆளுநரின் பதவியேற்புக்கு நான் சென்ற நிலையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது அதை நான் பொருட்படுத்தவில்லை. மக்கள் பிரதிநிதியாக அந்த நிகழ்வுக்கு சென்றமை சரி என்பதே எனது நிலைப்பாடாகும் என்றார்.

இவ்வாறான நிலையில் வடமாகாண ஆளுநர் மாகாண யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரை வடமாகாண சுகாதார பணிப்பாளராக தொடர்வதற்கு சமிக்ஞை காட்டுவதாக ஊடகங்கள் மூலம் அறிந்தேன்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்திக்கும் எமக்கும் பிரச்சினை இல்லை ஆனால், மத்திய அரசின் அதிகாரியாக இருக்கும் சத்தியமூர்த்தி மாகாண அதிகாரத்தை பயன்படுத்த முடியாது. விரும்பினால் மத்திய அரசின் பதவி நிலைகளை கைவிட்டு விட்டு மாகாண அதிகாரத்தின் கீழ் பதவி நிலைகளை வகிக்க முடியும்.

வடமாகாண ஆளுநர் மாகாண அதிகாரத்தை மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கும் சத்தியமூர்த்திக்கு வழங்குவது தொடர்பில் சாதகமாக நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக அறிய முடிகிறது. நான் ஆளுநரின் பதவியேற்புக்கு சென்றதன் பின் இன்று வரை அவருடன் பேசியது இல்லை என்னுடைய வேலைகளை நான் பார்க்கிறேன் அவருடைய வேலைகளை அவர் பார்க்கிறார்.

ஆகவே மாகாண அதிகாரத்தை மத்திக்கு விட்டுக்கொடும் நிலைப்பாட்டில் ஆளுநர் செயல்படுவாராயின் அதனை அவர் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்து எனது கருத்தாக பதிவு செய்ய விரும்புகிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# தியாக தீபம் திலீபனுக்கு கிளிநொச்சியில் நினைவேந்தல்

யது பாஸ்கரன்

இராசையா திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனின் தலைமையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் வட்டகட்சி பொது சந்தைக்கு முன்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வு, இலங்கை தமிழரசு கட்சி கிளிநொச்சி மாவட்ட கிளையின் இராமநாதபுரம் வட்டாரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

# டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவும் அபாயம்

ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு, மாவட்டத்தில் பருவமழை பெய்ய ஆரம்பித்து இருப்பதால் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனை கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கொழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி லதாகரனின் வழிகாட்டலில் கோட்டைமுனை பிரதேசத்தில் பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஞாயிற்றுக்கிழமை (24) காலை மேற்கொள்ளப்பட்டன. இந் நடவடிக்கையின் போது ஆறு பிரிவுகளாக சுகாதார பகுதியினர் பிரிக்கப்பட்டு 168 வீடுகளில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களாக காணப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களினால் அவைகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

# தனியாக வந்த சிறுமி தாயிடம் ஒப்படைப்பு

செ.தி.பெருமாள்

தன்னந்தனியாக நல்லத்தண்ணி நகருக்கு வந்திருந்த 13 வயதுடைய சிறுமி, சிவனொளி பாதமலைக்கு செல்லவதாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

சிறுமியின் மீது சந்தேகம் கொண்ட நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவரை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டார். அவர் கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், வீட்டில் யாரிடமும்



சொல்லாமல் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அச்சிறுமியின் பெற்றோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார், சிறுமியை தாயிடம் ஒப்படைத்துள்ளனர்.

# நுவரெலியாவில் விழுந்த இரத்தினபுரி நபர் மரணம்

செ.திவாகரன்

நுவரெலியாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த இரத்தினபுரிய மஹவலவத்த கீழ் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் வடிவேலு (வயது 59) கட்டடத்தின் முதலாவது மாடியிலிருந்து சனிக்கிழமை (23) கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

அன்றையதினம் இரவு அவர் மதுபோதையில் இருந்ததாகவும் தங்கியிருந்த இடத்தில் இவரை இரவு முழுவதும் காணவில்லை எனவும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தேடிப்பார்த்த இறந்த நிலையில் கிடந்ததாக சக தொழிலாளர்கள் பொலிஸாரிடம்



தெரிவித்துள்ளனர்.

சடலம் தொடர்பான மரண விசாரணைகளின் பின்னர் சடலம் நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பிரேத பரிசோதனை இடம்பெற்றதன் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக தெரிவித்த நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ‘செயல்’ எனும் குறுந்திரைப்படம் வெளியீடு

ஏ) நூருல் ஹுதா உமர்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட மாணவ பேரவையின் ஏற்பாட்டில் பீட மாணவர்களின் புது முயற்சியால் உருவாகி திரையிடப்பட்ட ‘செயல்’ எனும் குறுந்திரைப்படத்தின் அறிமுக விழா கலை மற்றும் கலாசார பீட மாணவ பேரவையின் தலைவர் ஸையித் உர்பி தலைமையில் கலை கலாசார பீட கலையரங்கில் நடைபெற்றது.

இந்த குறுந்திரைப்பட அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டதுடன் மேலும், கலை மற்றும் கலாசார பீட



பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில், தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம் ஐ நௌபர், பல்கலைக்கழக மாணவ நல சேவைகள் மைய பணிப்பாளர் கலாநிதி எம். றிஸ்வான், பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறை தலைவர்கள். சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.ஐ. பஸீல், கலை கலாசார பீடத்தினுடைய சிரேஷ்ட உதவி பதிவாளர் எம். அஸ்ஹர், மற்றும் நிர்வாக கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், இஸ்லாமிய கற்கை மற்றும் அரபு மொழி பீட மாணவ தலைவர் மற்றும் மாணவ மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மினி உலக முடிவில் விழுந்த இருவருக்கு கடுங்காயம்

பாலித ஆரியவங்ச

மடுல்சீம மினி உலக முடிவுக்கு அருகில் உள்ள ராகல பீடபூமியில் சனிக்கிழமை (23) மாலை பிறந்தநாளை கொண்டாடுவதற்குச் சென்ற இளைஞர்களில் இருவர் குன்றின் மீதிலிருந்து விழுந்து படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மடுல்சீம பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர்கள் இருவரே காயமடைந்துள்ளனர்.

இந்த இளைஞர்களில் ஒருவரின் பிறந்தநாள் கடந்த 23ஆம் திகதியாகும். மேலும் நான்கு நண்பர்களுடன் மினி உலக முடிவுக்கு கீழே உள்ள ரகல சானுவா என்ற இடத்திற்குச் சென்று அங்கு மதுபான பருகியுள்ளனர்.

பிறந்தநாள் விருந்து வைத்த இளைஞன் பாறையில் இருந்து தவறி விழுந்ததாகவும், அவரை காப்பாற்ற முயன்ற நண்பரும் பாறையில் விழுந்துவிட்டார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாக பதுளை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வேதமுல்லவின் ஆலோசனையின் பேரில் மடுல்சீம பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# “பண்ணையாளர்கள் விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும்”

வா.கிருஸ்ணா

பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்தி அவர்களுக்கான தீர்வினை வழங்கமுன்வரவேண்டும் என கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தங்களது மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத்தர கோரி பத்தாவது நாளாகவும் சுழற்சி முறையிலான கவன ஈர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக, 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் பெரியமாதவணை, மயிலத்தமடு கால்நடை




பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

“மகாவலி என்னும் போர்வையில் எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே”, “மேய்ச்சல் தரைப்பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியிருப்புகளை உடனடியாக நிறுத்து”, “அரசே! மயிலத்தமடு,மாதவனையை மேய்ச்சல்தரையாக பிரகடனப்படுத்து” போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் பல்வேறு கோஷங்களையும் எழுப்பினார்கள்.

போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றிய உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் உள்ள பால் வளத்தினைக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தமுடியாத அரசியல் தலைமைகள்சர்வதேச நாணயத்திடம் கையேந்தும் சூழ்நிலையேற்பட்டுள்ளதாகவும் உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போதே அவர்களுக்கான கடனை வழங்குவதற்கு சர்வதேச நாணயத்தியம் உடன்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

# மூதூரில் ஐவர் கைது



ஏ.எம்.கீத்

திருகோணமலை மூதூர் பிரதேச கடல் எல்லைக்குள் சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க உதவுதல், தமது கடமையை செய்யவிடாது செயற்பட்டமை தொடர்பாக திருகோணமலை கடற்படையினர் மூதூர் பிரதேச ஹபீப் நகரைச்சேர்ந்த ஐவரை சனிக்கிழமை (23) கைது செய்துள்ளதாக துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பயன்படுத்திய படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் முப்பது தொடக்கம் நாற்பது வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்களை, கைப்பற்றப்பட்ட படகுடன் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அங்காடி விவகாரமும் திலீபனின் ஊர்தி மீதான தாக்குதலும்

தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய நினைவு ஊர்தியின் மீது, திருகோணமலையில் அப்பட்டமாக நடத்தப்பட்ட தாக்குதலை அங்கிருந்த பாதுகாப்பு சீருடை தரித்தவர்கள் கைகட்டி வேடிக்கை பார்த்தனர். இல்லையேல், தாக்குதல்களை மேற்கொண்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடமளித்துவிட்டு கண்டும் காணாதது போலவே இருந்தனர்.

அந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. அதனையடுத்தே சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர். திலீபனின் ஊர்திக்கு இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்களில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுப்படி செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டது. எனினும், கொழும்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு மட்டுமே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திலீபனின் ஊர்தி தொடர்பில் இருதரப்பு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இனவாதத்தை தூண்டும் ஒரு நிகழ்வாகவே இந்த ஊர்தியை பார்கின்றனர். எனினும், நினைவேந்தலை நியாயப்படுத்துகின்றனர்.

திலீபனின் ஊர்தியும், அதனோடு சென்றிருந்தவர்களும் தாக்கப்பட்டதை பொலிஸார் வேடிக்கை பார்த்தது மட்டுமே எஞ்சியிருக்கிறது. இதற்கிடையே, பொரளை பல்பொருள் அங்காடியில் திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யுவதியொருவர் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து அறிக்கையொன்றை விடுத்துள்ள இலங்கை பொலிஸ், சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு யாரையும் தாக்க எவருக்கும் உரிமை இல்லை அந்த நபரையோ பெண்ணையோ பிடித்து பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

அப்படியாயின், திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி மீதும், அதனோடு சென்றிருந்தவர்கள் மீதும் காடைத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டபோது இவ்வாறதொரு தெளிவூட்டும் அறிக்கையை இலங்கை பொலிஸ் விடுக்காமல் விட்டது ஏன்?

நாட்டின் சட்டம் சகலருக்கும் சமமானதாக இருக்கவேண்டும், இன,மொழி, மத வேறுபாடுகளுக்கு அமைய, தங்களுக்குத் தேவையான வகையில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது, முரண்பாடுகளையே ஏற்படுத்தும், தாக்குதல் சம்பவங்களை பல வகைப்படுத்தலாம் என்றாலும் தாக்குதலே நடத்தப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஏனெனில், திருகோணமலையில் திலீபனின் ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்ட காட்சிகள் அடங்கிய காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தது என்பதை பொலிஸார் கவனத்தில் கொண்டிருக்கவேண்டும். அப்போது, அங்கு பொலிஸாரும் இருந்துள்ளனர்.

திலீபனின் ஊர்தி மீதான தாக்குதலை ஒரு களவுடன் ஒப்பிட்டிருக்கக்கூடாது. எனினும், காடைத்தனமான தாக்குதலுக்கு ஒரு சட்டமும், களவெடுத்தமைக்கு சட்ட ரீதியில் விளக்கமளித்து கடுமையான அறிவுறுத்தல் விடுத்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

என்பதுடன், சகலருக்கும் சட்டம் சமமானது என்ற சிந்தனை உதிக்கும் வரையில், பக்கசார்பான முடிவுகளே எடுக்கப்படும் என்பது கடந்தகால கசப்பாகும். அதனை மாற்றியமைக்க முயற்சிக்கவும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஒருநாளும் தெரியாதவர்களுடன் கூட மனிதர்கள்மோதுகின்றார்கள். பொது இடங்களில், பஸ்கள், விழாக்கள், சந்தைகளில் கண்டபடி வாக்குவாதம் செய்கின்றார்கள். மோசமாகச் சண்டையிடுகின்றார்கள்.

பகைமை எப்படித் திடீரென முற்றுகின்றது? பலர் பார்க்கும்போது, வெட்கமே இல்லாமல், ஆணவத்துடன் செயற்படுதல் மனிதமற்ற செயலாகும்.

பொது இடங்களில், கூட்ட நெரிசலில் முந்திக்கொள்ள முனைவார்கள். இதன்போது வாக்குவாதம் ஏற்படும். அப்புறம் சண்டைதான். இன்னும் சிலர், தெருவால் போகின்றவர்களை வேண்டுமென்றே கேலி செய்வார்கள். கேட்பவர்கள் விடுவார்களா? மோதல் வெடிக்கும்.

திருமண வீடுகளில் சிலர் அநாகரிகமாக நடந்துகொள்வார்கள். ஏதாவது சின்ன விடயங்களைப் பெரிதாக்கி, வார்த்தைப் பிரயோசனங்களை நெருப்பாக வீசுவார்கள்.

சந்தோசம் சிலருக்குப் பிடிப்பதே இல்லை. விழாக்களில் அரசியல் பேசி, சிலர் தங்கள் கட்சியே பெரிதென விவாதிப்பார்கள். அதுவே, கலிங்கத்துப் போர் போலாகிவிடும். வெட்கமே இல்லையா?
எந்த விழாவுக்கும் பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளது.
ஆணவத்தை அடக்குக;
பொறுமையாக இருங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தெற்காசியா தொடர்பிலான பெரியண்ணனின் கொள்கை மாறியிருக்கிறதா?



என்.கே.அஷோக்பரன்

கனடாவும், இந்தியாவும் மிகப்பெரிய இராஜதந்திர முறுகல் நிலையை சந்தித்து நிற்கும் காலப்பகுதியிது. பதினைந்து வருடங்கள் முன்பு கூட இதுபோன்றதொரு நிலை ஏற்பட்டிருக்காது. ஏனென்றால், உலகளவில் இந்தியா தனது பலத்தை இதற்கு முன்னர், இத்தனை தூரம் வெளிக்காட்டியதில்லை. தனக்குக் கிடைக்கவிருந்த ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆசனத்தையே, சீனாவுக்கு வழங்காததை தாம் பெறுவது கூடாது என்று ஏற்காது விட்ட நேருவிய இந்தியா இப்போது இல்லை. வறிய நாடு, பிச்சைக்கார நாடு என்று மேற்குலகமானது தனது ஆதிக்கப்பார்வையின் காரணமாக, ஆபிரிக்காவுக்கு அடுத்து மோசமாகப் பார்த்த இந்தியா இன்று இல்லை. இன்று இந்தியா உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரம்! ஒரு வல்லாதிக்க கட்சியின் சர்வாதிகார ஆட்சியில் சீனா பெரும் பொருளாதார வளர்ச்சியை சந்தித்தது. ஆனால் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக, பகுதியளவு சமஷ்டி ஆட்சியைக் கொண்ட நாடாக இருந்துகொண்டு, தனக்குள் பலநூறு பிரிவினைகளைத் தாங்கியபடி இந்தியா அடைந்த வளர்ச்சி அபாரமானது. 1991-ன் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதாரக் கொள்கை மாற்றம்தான் இதற்கெல்லாம் அடித்தளம். அந்த அடித்தளத்தைப் போட்டவர்கள் அன்றைய பிரதமர் நரசிம்ஹ ராவும், அன்றைய நிதியமைச்சர் கலாநிதி மன்மோஹன் சிங்கும். அந்த அடித்தளத்திலிருந்து வேர்விட்டு வளர்ந்த இந்தியா கிட்டத்தட்ட 30 ஆண்டுகளில் அடைந்த வளர்ச்சி அபாரமானது. இன்று மேற்குலகினால் தொல்லைக்குட்படுத்தப்பட முடியாத ஒரு சக்தியாக இந்தியா உயர்ந்திருக்கிறது. இன்றைய கனடா-இந்திய இராஜதந்திர முறுகல் நிலையில் இந்தியாவின் பலம் வெளிப்பட்டு நிற்கிறது. கனடாவின் உற்ற தோழர்களான அமெரிக்கா, பிரித்தானியா, மற்றும் அவுஸ்திரேலியா கூட இன்றுவரை கனடாவுக்கு முழு ஆதரவாக நிற்கவில்லை. அவை கனடா-இந்திய இராஜதந்திர முறுகல் நிலை தொடர்பில் மழுப்பல் நிலையைத்தான் இன்றுவரை கடைப்பிடிக்கின்றன. இதற்குக் காரணம் இன்று இந்தியா அடைந்திருக்கும் பலம் வாய்ந்த நிலை.

இந்தியாவின் இன்றைய பலம் வாய்ந்த நிலை தெற்காசியாவில் என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அவதானிப்பது எமக்கு அவசியமானதொன்றாக இருக்கிறது. தெற்காசியாவைப் பொறுத்தவரையில் இந்தியாவிற்கு நிகரான பொருளாதாரப் பலம் நிறைந்த இன்னொரு நாடு தெற்காசியாவில் இல்லை. இந்தியாவிற்கு அடுத்து, தெற்காசியாவின் பெரிய பொருளாதாரம் பங்களாதேஷ். ஆனால் அது இந்தியப் பொருளாதாரத்தின் அளவில் ஏறத்தாழ 13% மட்டுமே! அடுத்த இடத்தில் பாகிஸ்தான் இருக்கிறது. பங்களாதேஷ் பொருளாதாரத்தின் ஏறத்தாழ 20%ம் கொண்ட பொருளாதாரமாக இலங்கை அடுத்த இடத்தில் இருக்கிறது. இலங்கைப் பொருளாதாரத்தின் ஏறத்தாழ 40%ம் கொண்ட பொருாளதாரமாக நேபாளம் அடுத்த இடத்திலும், ஆஃப்கானிஸ்தான், மாலைத்தீவு, மற்றும் பூட்டான் ஆகியன அடுத்தடுத்த இடங்களிலும் இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், இந்தியாவைத் தவிர்ந்த மற்ற 7 தெற்காசியநாடுகளின் பொருளாதாரத்தின் கூட்டளவு என்பது இந்திய பொருளாதாரத்தின் 28% மட்டும்தான்! இந்திய பொருளாதாரம் என்பது மற்ற தெற்காசிய நாடுகள் அனைத்தினதும் பொருளாதாரத்தைவிட மூன்று மடங்கிற்கு மேல் பெரியது! ஆகவே இந்தியா தெற்காசியாவின் பெரியண்ணன் என்பதில் எதுவித மாற்றுக்கருத்துக்களும் இருக்க முடியாது.

பெரியண்ணனின் தெற்காசியா தொடர்பான வெளிநாட்டுக்கொள்கை என்று நாம் பார்க்கும்போது, பாகிஸ்தானைத் தவிர்த்துவிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இந்தியாவைப் பொறுத்தவரையில் பாகிஸ்தான் எதிரிநாடு. தனது எல்லையை ஒட்டியிருக்கும் இன்னொரு நாடான சீனா போட்டிநாடு. இந்தியாவும், சீனாவும் இன்றைய உலகின் பலமான போட்டியாளர்கள். பாகிஸ்தான் மற்றும் சீனாவைத் தவிர்த்த ஏனைய தெற்காசிய மற்றும் தனது எல்லையை ஒட்டிய சீனா தவிர்ந்த நாடுகள் தொடர்பில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை ஆய்வு செய்யும் போது, இந்திரா கோட்பாடு, அல்லது ராஜிவ் கோட்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. இது பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பான இந்தியாவின் கொள்கையாக இருந்தது. இது மூன்று முக்கிய அடிப்படைகளைக் கொண்டது. முதலாவது, தெற்காசிய நாடொன்றின் உள்ளக முரண்பாடுகளில் தலையிட, இந்தியாவுக்கு எந்தவோர் எண்ணமும் கிடையாது. அதேவேளை, எந்த நாடும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதை, இந்தியா கடுமையாக எதிர்க்கும். இரண்டாவது, இந்திய நலன்களுக்கு, வெளிப்படையாக அல்லது உள்ளார்ந்த வகையில் எதிராக அமையும் வகையில், வெளிநாடொன்று, தெற்காசிய நாடொன்றின் உள்ளக முரண்பாட்டில் தலையிடுவதை, இந்தியா சகித்துக் கொள்ளாது. ஆகவே, எந்தத் தெற்காசிய நாடும் இந்தியாவுக்கு எதிராக அமையத் தக்கவகையில், வெளிநாடொன்றிடமிருந்து இராணுவ உதவியைப் பெறக் கூடாது. மூன்றாவது, ஒரு தெற்காசிய நாட்டுக்குப் பாரதூரமான உள்ளக முரண்பாட்டை எதிர்கொள்ள அல்லது சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்துக்குச் சகிக்கமுடியாத அச்சுறுத்தல் காரணமாக, வெளியக உதவி உண்மையாகவே தேவைப்படுமானால், அது இந்தியா உள்ளிட்ட அருகிலுள்ள நாடுகளிடம் உதவி கோரலாம். அத்தகைய சூழலில், இந்தியாவைத் தவிர்த்தலானது, குறித்த அரசாங்கத்தின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படும்.

இந்திரா, ராஜிவ் காலத்து இந்தியா அல்ல இப்போது இருக்கும் இந்தியா. அப்படியானால், இந்தியாவின் தற்போதைய பிராந்தியக் கொள்கை மாறியிருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. 2008 காலப்பகுதியிலேயே "அயலக முன்னுரிமைக்" கொள்கைக்கான அடிப்படைகள் வெளிப்பட்டிருந்தாலும், பாரதப் பிரதமர் நரேந்திர மோதியின் ஆட்சியில் "அயலக முன்னுரிமை" ("Neighbourhood First") என்பது முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. "நண்பர்கள் மாறலாம், ஆனால் அயலவர்கள் மாறுவதில்லை, அயலவர்கள் ஒன்றாக வாழ்ந்தாக வேண்டும்" என்று முன்னர் ஒரு முறை அடல் பிஹாரி வாஸ்பாய் சொன்னது இங்கு குறிப்பிடத்தக்கது. பிராந்திய ஒத்துழைப்பு என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அத்தியாவசியமானது, அதுதான் இந்தக் கொள்கையின் அடிப்படையும் கூட. ஆனால் வெறுமனே தனது பாதுகாப்புத் தேவையை அயலவர்கள் மீது திணிப்பதாக அமையாமல், அயலக நாடுகளோடு பரஸ்பர நல்லுறவைக் கட்டியெழுப்பும் அணுகுமுறையை இந்தியா தற்போது முன்னெடுக்கிறது. அது அரசாங்கங்களிடையேயான உறவுகளைத் தாண்டி மக்களிடையேயான இராஜதந்திர உறவு மேம்பாட்டிலும் கணிசமாக அக்கறை செலுத்துகிறது.

இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நின்ற போது, இலங்கைக்கு அவசர உதவி தேவைப்பட்ட நிலையில், ஏறத்தாழ 4 பில்லியன் டொலர்கள் அளவிலான உதவியை அள்ளி வழங்கியது இந்தியா. அதற்கு முன்னர் "கொவிட்-19" பெருந்தொற்றின் போதும், இலங்கை உட்பட்ட பல நாடுகளுக்கும் முதன் முதலில் தடுப்பூசியை வழங்கியது இந்தியாதான். இந்தியாவின் இந்த அணுகுமுறையானது பலத்தை மட்டும் பயன்படுத்திய இராஜதந்திரத்தைவிட, பரஸ்பர நம்பிக்கையையும், தோழமையையும் கட்டியெழுப்பும் இராஜதந்திரப் பாதையை இந்தியா தேர்ந்தெடுத்திருப்பதை உணர்த்தி நிற்கிறது. இந்தியாவின் நீடித்து நிலைத்த பாதுகாப்பிற்கு, நெருக்கமான அயலக உறவு அவசியம் என்பது இந்தியா ஆரம்பத்திலிருந்து உணர்ந்த ஒன்று. ஆனால் அதனை ஏற்படுத்த அரசாங்கங்களிடையேயான பரஸ்பர நம்பிக்கை மட்டும் போதாது, மக்களிடையேயான நம்பிக்கையும், விசுவாசமும், நல்லுறவும் அவசியம். ஆகவேதான் இந்தியா நேரடியாக மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் விடயங்களல் முதலிடுகிறது. நிறைய மக்கள் நலத்திட்டங்களுக்கு உதவுகிறது. மக்களுக்கான நேரடி நிகழ்வுகளை நடத்துகிறது. இந்தியா பற்றிய நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இந்திரா அல்லது ராஜிவ் கோட்பாட்டின் அடிப்படைகள் மாறவில்லை. அவை மாறவும் முடியாது. அதனால்தான் சீன புலனாய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதை இந்தியா கடுமையாக எதிர்க்கிறது. சீனாவோ, ஏனைய பெரும் பலம்வாய்ந்த நாடுகளோ இந்தியாவிற்கு அருகிலுள்ள இலங்கையின் வடக்கில் பெருமளவு முதலீடுகளைச் செய்து, அங்கு காலூன்றுவதைக்கூட இந்தியா விரும்பவில்லை. ஆனால் இந்த பாதுகாப்புக் காரணங்களோடு நின்றுவிடும் வெளியுறவுக் கொள்கையைத்தாண்டிய மக்களிடையே நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் விதைக்கும் அணுகுமுறையை இந்தியா தனது "அயலக முன்னுரிமை-க்" கொள்கையினூடாக முன்னெடுக்கிறது.

சுருங்கக் கூறின், இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைகள் மாறவில்லை, ஆனால் அணுகுமுறை மாறியிருக்கிறது. பெரியண்ணன் கொஞ்சம் அன்புகாட்டத் தொடங்கியிருக்கிறார். தனது நலனைக் காக்க கண்டிப்பு மட்டும் போதாது, நிறைய அன்பும் வேண்டும் என்பதை பெரியண்ணன் புரிந்துகொண்டிருக்கிறார்.

## கடிதங்கள்

### நடவடிக்கை எடுக்க மறுத்த பொலிஸார்

முல்லைத்தீவு - மல்லாவியில் அரச வாகனத்தை முறைகேடாக பயன்படுத்திய சம்பவம் ஒன்று வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவு - மல்லாவியில் நில அளவை திணைக்களத்தினுடைய வாகனத்தில் வந்த ஊழியர்கள் வெள்ளிக்கிழமை (22) மாலை 6:20 மணியளவில், மல்லாவி பகுதியிலுள்ள மதுபானசாலையில் வாகனத்தை நிறுத்திவிட்டு வாகனத்தில் மதுபானங்கள் பெற்று செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

ஒரு அரச திணைக்களத்திற்குரிய வாகனத்தை முறைகேடாக பயன்படுத்திய இவ்வாறான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக மல்லாவி பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களிடம் சென்று இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெறுகின்றது, குறித்த வாகனத்தையும், சாரதியையும் கைது செய்யுமாறு மக்கள் கோரிய போது அவ்வாறு கைது செய்வதற்கு தங்களால் முடியாது என பொலிஸார் மறுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த வாகனம் அவ்விடத்தில் நிற்பதை ஒளிப்பதிவு செய்வதனை கண்டு அவர்கள் உடனடியாக அவ் இடத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.
பின்னர் சிறிது நேரம் தாமதித்து குறித்த மதுபானசாலைக்கு மீண்டும் வந்து மதுபானங்களை பெற்றுக்கொண்டு சென்றிருந்தது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதோடு பொலிஸாரின் குறித்த செயற்பாடு தொடர்பிலும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.



–சண்முகம் தவசீலன்



# மலையக மக்களும் இலங்கை அரசியலும்

ஞா. மைக்கல் பெவன்
ஊடககற்கைகள்
2ஆம் வருடம்
யாழ்ப்பாணப்
பல்கலைகழகம்

மலையகத்தை பொறுத்தவரையில் அன்று தொட்டு இன்று வரையில் மக்களுக்கு அரசியல் சார்ந்த சரியான விளக்கம் வழங்கப்படாது, அரசியல் ஏற்பாடுகளின் மூலமாக மலையக மக்கள் சார் அரசியல் உரிமைகள் கேள்விக்குறியாகி வருகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மலையக மக்கள் 1823 இல் இலங்கைக்கு வருகை தந்திருந்தாலும் 1919 வரைக்கும் அரசியல் தொடர்பான எவ்வித ஈடுபாடும் இல்லாது ஓர் அனாதைகளாக ஒதுக்கப்பட்டு இருந்தனர். பின்னர் சேர். பொன் அருணாச்சலம் மற்றும் பெண் சுந்தரம் ஆகியோர் இணைந்து தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை நிறுவினார்கள். இதுவே முதலாவது தொழிற்சங்க அமைப்பாக கருதப்படுகின்றது. இந்த அமைப்பானது 'தோட்ட துண்டு முறை' என்ற விடயத்தை வெகுவாக எதிர்த்தது. இவர்களின் மூலமாக இவை ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் நடேசஐயர் என்பவரின் மூலம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நடேசஐயர் என்பவர் ஏ. இ குணசிங்க அவர்களின் அமைப்பில் உபதலைவராக இருந்தார். அந்த அமைப்பின் இனவாதத்தை எதிர்த்து இவர் வெளியேறினார். 1936ஆம் ஆண்டு டொனமூர் அரசாங்க சபைக்கான ஹட்டன் தேர்தல் தொகுதியில் இருந்து மக்கள்பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன்பின்னர் 1935- 1947ஆம் ஆண்டிற்கும் இடையில் இடதுசாரிகளின் செல்வாக்கு மலையகத்தில் எழுச்சி பெற்ற காலமாக காணப்பட்டது. 1935 ஆம் ஆண்டு 'லங்கா சமசமாஜ கட்சி' தோற்றம் பெற்றது. இதன் மூலம் அவர்கள் மலையகத்தில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இவ்வாறு கொள்கை பரப்பும்போது ஏற்பட்ட 'முல்லோயா போராட்டம்' மலையகத்தின் முதலாவது போராளியான கோவிந்தன் இறந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1947ஆம் ஆண்டு தேர்தலில் ஏழு நபர்கள் மலையகம் சார்ந்து தெரிவு செய்யப்பட்டனர். அவற்றுள் ஆறு பேர் இலங்கை இந்திய காங்கிரஸை சேர்ந்தவர்கள். ஒருவர் பண்டாரவளையை சேர்ந்த நடராஜா ஆவார். இதற்கு பின்னரான காலத்தில் மலையக மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் கொழும்பில் பணி புரிந்தவர்களுக்கு எதிராகவே முன்னெடுக்கப்பட்டன. பின்னரான காலப்பகுதியிலேயே அது மலையக நோக்கி நகர்ந்தது.

உள்ளூராட்சி தேர்தல் மூலம் பண்டாரநாயக்க காலத்தில் மலையக மக்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டது. அதாவது கொழும்பில் இருந்த இந்தியா வம்சாவழியை சேர்ந்த அரசவேலையில் இருந்தவர்களை பணி நீக்கம் செய்யப்பட்டதை குறித்து இலங்கையில் இருந்த இந்தியா அமைப்புகள் காந்தியிடம் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கை பின்னர் நேருவின் பார்வைக்கு சென்றதன் பின்னராக நேருவின் ஆலோசனையின் பேரில் 1939 ஆம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் அமைக்கப்பட்டது. இது காலப்போக்கில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வாறு 1823 ஆம் ஆண்டிலிருந்து இந்த மண்ணிற்காக பாடுபட்டவர்களுக்கு இந்த நாட்டில் இடம் இல்லை என்று ஒரு நிலை உருவாக்குவதற்காக 1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமை சட்டம் அமுலுக்கு வந்தது. மலையக மக்கள் இலங்கையில் பிறந்தவர் என்பதை உறுதி செய்வதோடு தந்தையும் இலங்கையில் பிறந்தவர் என்பதையும் உறுதி செய்யப்பட வேண்டிய கட்டாயம் காணப்பட்டது. மேலும் திருமணம் செய்தவராக இருந்தால் தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் இலங்கையில் வசித்தல் வேண்டும் என்றும் திருமணம் ஆகாதவராயின் 10 வருடங்கள் இலங்கையில் வசித்துள்ளதாக உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்தோடு பிறப்பு சான்றிதழ்பதிவு முறையானது 1913ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் குறைந்த கற்ற சமுதாயத்தை கொண்ட மலையக மக்கள் மத்தியில் அதிகமானவர்களால் இதனை நிரூபிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வாறு இறுதி நேரத்தில் விண்ணப்பித்த மக்களையும் முடிந்த அளவு நிராகரிக்கவே செய்தனர். இதன் பின்னர் கொண்டுவரப்பட்ட தேர்தல் திருத்த சட்டத்தின் மூலம் 1960 ஆம் ஆண்டு வரை அரசியல் அரங்கில் ஒரு பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

அதன் பின்னராக 1964 ஆம் ஆண்டு இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தமானது மலையக மக்களின் வாழ்க்கையில் அதிகார வர்க்கம் தனது அரசியல் விளையாட்டை கட்டவிழ்த்த ஒன்றாக காணப்படுகிறது. இதில் குறிப்பிட்ட சில மக்கள் தொகையினரையே மீண்டும் இந்தியாவிற்கு அழைத்துச் சென்றனர்.

முதன்முறையாக 1977 ஆம் ஆண்டு நுவரெலியா தேர்தல் தொகுதி ஆனது மூன்று அங்கத்தவர்களை கொண்டு தேர்தல் தொகுதியாக வந்தது. அத்தோடு மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் 1988 ஆம் ஆண்டளவில் மாகாண சபை தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. இக்கால பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த தொண்டைமான், நாடற்றவர்களாக இருந்த இந்திய வம்சாவளி மக்களுக்கு ஒரு சட்டத்தின் மூலம் பிரஜா உரிமையை பெற்றுக் கொடுத்தார்.

இலங்கையின் அண்மைக்கால போக்கில் மலையகம் தொடர்பாக நாம் அவதானிக்கும் பொழுது 2012 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நல்லாட்சி திட்டம் மலையக மக்களுக்கு அதிக நிதி உதவிகளை வழங்கியிருந்தது. அத்தோடு இந்திய நாட்டின் பிரதமர் மோடியின் மலையகத்திற்கான வருகையின் காரணமாக இலங்கையின் புவிசார் அரசியலில் மலையக மக்களை தவிர்த்து பார்க்க முடியாது என்பதை அடையாளப்படுத்த கூடியதாக இருந்தது.

இவ்வாறு வளர்ச்சியடைந்துள்ள மலையக மக்களின் அரசியலானது அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டுமாக இருந்தால் கோட்பாட்டு ரீதியான சிக்கல் நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்பட வேண்டும் .

01. மலையக மக்களின் அடையாளம் இந்திய வம்சாவழி அல்லது மலையக மக்கள்

இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் பற்றி வரலாறு ரீதியாக ஆராயும் பொழுது இடம் பெயர்ந்த சமூகத்தினருக்கு தனியான ஒரு பெயர் வழங்கப்பட்டிருக்கின்றது தவிர இந்திய வம்சாவளி என்று அவர்கள் அடையாளப்படுத்தப்படுவதில்லை. ஆனால் மலையகம் என்ற ஒரு இடத்தை வளமான பூமியாக மாற்றிய மக்களை இந்திய வம்சாவழி என்று அழைப்பதன் மூலம் குறித்த மக்களை இந்த நிலத்திற்கு சொந்தமானவர்கள் அல்ல என்று அடையாளப்படுத்துவதாக அமைகின்றது. அத்தோடு இலங்கையில் வாழும் சிங்கள பேரினவாத மக்கள் மத்தியில் இந்த அடையாளமானது மலையக மக்களை அந்நியமாக பார்க்கும் ஒரு சூழ்நிலை ஏற்படுத்துகின்றது.

02. மலையக மக்கள் தேசிய இனமா? சிறுபான்மை இனமா?

ஒரு குறித்த சாராரை இவ்வாறு அடையாளப்படுத்துவதாக இருந்தால் அவர்களுக்கென்று தனியான ஒரு மொழி வாழ்வாதாரத்திற்கான அடிப்படை பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் இவை அனைத்தும் காணப்பட வேண்டும் ஆனால் இவை அனைத்தும் காணப்படுகின்ற மலையக மக்களை இன்னும் சிறுபான்மை மக்கள் என இன்று வரை இலங்கையில் அடையாளப்படுத்துகின்றனர்.

03. மலையக மக்களின் பிரச்சினை எனப்படுவது திறமைக்கானதா? அல்லது அடையாளத்திற்கு உரியதா?

மலையக சமுதாயமானது தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படுமாயின் அவர்களின் பிரச்சனையானது வெறுமனே அடையாளம் சார்ந்த பிரச்சனையாக கருதப்படாது, வந்து தேசிய இனத்தின் இமைக்கு எதிரான பிரச்சினையாகவே அது பார்க்கப்படும். இவ்வாறு அடையாளப்படுத்தப்படும் போது அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களுக்கான பெறுமதியானது உயர்வானதாக அமைவதோடு அவர்களுக்கான தீர்வுகளும் வினைத்திறன் மிக்கதாக பெற்றுக்கொடுக்கப்படும்.

04. மலையக மக்களுக்கு இவ்வாறான அதிகார பகிர்வு சிறப்பானது?

மத்திய மாகாணத்தில் அதிகமான மலையக மக்கள் வாழ்கின்றனர். ஆனால் மாவட்ட ரீதியில் அவர்களுடைய செறிவு வேறுபடுகின்றது. எனவே மலையக மக்கள் செறிவாக இருக்கும் இடத்தில் நிலரீதியான அதிகார பகிர்வும்இ ஐதாக இருக்கும் இடங்களில் சமூகம் சார்ந்த அதிகார பகிர்வும் மிகவும் ஏற்புடையதாக இருக்கும்.




Lanka Realty Investments உடன்

# SLT-MOBITEL கைகோர்ப்பு SLT-MOBITEL, ரியல் எஸ்டேட்

வடிவமைப்பாளரான Lanka Realty Investments PLC உடன் கைகோர்த்து, புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள Mulberry Residential complex க்கு நவீன ஃபைபர் தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது. இதனூடாக நவீன வாழ்க்கை முறைக்கு வலுச்சேர்த்துள்ளது.

இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான உடன்படிக்கையில் SLT-MOBITEL இன் நுகர்வோர் வியாபார பிரிவின் பிரதம வணிக அதிகாரி இமந்த விஜேகோன் மற்றும் Mulberry Holdings (Private) Limited சொத்துக்கள் முகாமையாளர் துஷ்மந்த கசுன் ஆகியோர் கைச்சாத்திட்டதுடன், இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நவீன குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் புகழ்பெற்ற நிறுவனமாக Lanka Realty Investments PLC திகழ்கின்றது. கொழும்பு 09 பகுதியில் அமைந்துள்ள The Mulberry Apartments இனால், 121 சொகுசு தொடர்மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு ஜிம்னாசியம்கள் மற்றும் இரு நீச்சல் தடாகங்கள் போன்றன அடங்கியிருப்பதுடன், மேம்படுத்திய வாழ்க்கை அனுபவத்தை வழங்கும் நவீன அம்சங்களும் அடங்கியுள்ளன.

இதுவரையில், வதிவிட அனுபவத்தை மாற்றியமைக்கும் நவீன ஃபைபர் தீர்வுகள் வழங்குவதில் SLT-MOBITEL முன்னோடியாக திகழ்கின்றது. தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உயர் தர சேவைகளை வழங்குவதற்கான அர்ப்பணிப்புடன் SLT-MOBITEL ஆனது, வதிவிடத் தொகுதிகள் இணைப்பின் பயனை அனுபவிப்பதையும், டிஜிட்டல் முறையில் மேம்படுத்திய வாழிட சூழலை உருவாக்கிக் கொடுப்பதையும் உறுதி செய்துள்ளது.

சொகுசான வாழிட அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் புதிய அடையாளத்தை ஏற்படுத்தும் வகையில் SLT-MOBITEL, ஃபைபர் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. அதனூடாக, வதிவோருக்கு இலகுவாக இணைப்புகளை ஏற்படுத்தல், பணியாற்றல் மற்றும் டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையை பின்பற்றல் போன்றவற்றுக்கு அவசியமான உயர் தீர்வுகள் வழங்குகின்றது. வசிப்போருக்கு தடங்கலில்லாத, அதிவேக இணைப்பு ஆகியவற்றை அனுபவிக்க முடியும். அத்துடன், high-definition ஸ்ட்ரீமிங், மெய்நிகர் சந்திப்புகளில் பங்கேற்றல் அல்லது ஒன்லைன் கேமிங்கில் ஈடுபடல் போன்ற பல்வேறு அம்சங்களை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

SLT-MOBITEL இன் பிரதம வணிக அதிகாரி நுகர்வோர் வியாபாரங்கள் இமந்த விஜேகோன் கருத்துத் தெரிவிக்கையில், "Mulberry residential complex க்கு நவீன SLT ஃபைபர் தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கைகோர்த்துள்ளமை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது நவீன fibre optic வலையமைப்பினூடாக வதிவோரின் வாழிட அனுபவம் மேம்படுத்தப்படுவதுடன், அதிவேக இணைய பாவனை, தொடர்ச்சியான இணைப்பு மற்றும் பல டிஜிட்டல் தீர்வுகளை அனுபவிக்கக்கூடியதாகவும் இருக்கும்." என்றார்.

Mulberry Holdings (Private) Limited சொத்துக்கள் முகாமைத்துவ பணிப்பாளர் துஷ்மந்த கசுன் கருத்துத் தெரிவிக்கையில், "தரம் தொடர்பில் புதிய தொழிற்துறை நியமத்தை ஏற்படுத்துவது மற்றும் தமது சூழலுடன் ஒத்திசைவான சமூகங்களை ஏற்படுத்துவது எமது நோக்காக அமைந்துள்ளது. SLT-MOBITEL உடன் எமது கைகோர்ப்பினூடாக, எமது வதிவோருக்கு நவீன தொழில்நுட்பத்தை அணுகும் வாய்ப்பு வழங்கப்படுவதோடு, உண்மையில் இணைக்கப்பட்ட வாழ்க்கைமுறையை அனுபவிக்கவும் உதவியாக அமைந்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக சிறப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் மற்றும் நவீன தீர்வுகளை பின்பற்றும் Mulberry Apartments இன் அர்ப்பணிப்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது." என்றார்.

SLT-MOBITEL மற்றும் Lanka Realty Investments PLC ஆகியவற்றுக்கிடையிலான கைகோர்ப்பினூடாக, நவீன வாழிட அனுபவம், தொழில்நுட்ப ஒன்றிணைப்பு மற்றும் சௌகரியம் ஆகியவற்றை Mulberry Apartments வதிவோரிடையே மேம்படுத்தப்படுவதாக அமைந்துள்ளது. இணைப்புகளுடனான வாழ்க்கை முறையினூடாக வதிவோர் அனுகூலம் பெற முடியும் என்பதுடன், தொழில்நுட்பம் என்பது சொகுசான வாழ்க்கையுடன் வினைத்திறனான வகையில் பிணைப்பை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கும். கொழும்பில் நவீன வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அவசியமான பரந்தளவு டிஜிட்டல் சேவைகளை வழங்கி உண்மையான அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

# John Keells Properties தனது 'Viman'ஐ

அறிமுகப்படுத்தியுள்ளது



John Keells Properties ஜா-எல நகரின் மையப்பகுதியில் சமகால வாழ்க்கையை மாற்றும் வகையில் தனது புதிய குடியிருப்புத் திட்டமான 'Viman' ஐ அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

John Keells Holdings நிறுவனத்தின் சொத்துக்கள் தொடர்பான பிரிவாக விளங்கும் John Keells Properties நிறுவனம், கனவு வாழ்கைக்கான இடங்கள் மற்றும் விதிவிலக்கான அனுபவங்களை வழங்கப் புதுமையான அணுகுமுறையுடன் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி ரியல்ஸ் எஸ்டேட் சந்தையில் மதிப்புமிக்க நற்பெயரை சம்பாதித்துள்ளது.

'புதிய உலகத்தை உருவாக்குதல்' என்ற நோக்கத்துக்கு இணங்கும் வகையிலும், வாழ்க்கையின் அனுபவங்களை மறுவடிமைப்பதற்கு இடமளிக்கும் வகையிலும் அமையப்பெற்றுள்ள Viman குடியிருப்புத் திட்டம் John Keells Properties நிறுவனத்தின் தனித்துவமான புதிய முயற்சியைப் பிரதிபலிக்கிறது. 6 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில், சௌகரியமான நவீன 418 தொடர்மாடி வீடுகளைக் கொண்டிருப்பதுடன், Viman குடியிருப்புத் திட்டத்தின் வடிவமைப்பானது சிறிய நகரின் கட்டமைப்பின் அழகைத் தக்கவைக்கும் அதேநேரம், கொழும்பு நகரை இலகுவில் அணுகக் கூடியதாகவும், பாதுகாப்பு, குடும்பங்களுக்கு நட்பான சூழலை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது.

John Keells Holdings PLC நிறுவனத்தின் உடமைப் பிரிவின் தலைவர் நயன மாவில்மட குறிப்பிடுகையில், 'John Keells Properties நிறுவனத்தின் சமீபத்தைய எல்லையாக இருக்கும் Viman ஐ அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இது வெறுமனே ஒரு குடியிருப்பாக மாத்திரம் அமையாது என நாம் நம்புகின்றோம். இது சிறிய நகரின் அரவணைப்பில் மூழ்கியிருக்கும் ஒரு வாழ்க்கை முறையாக அமையும். சமநிலை, இயற்கை மற்றும் நவீன வசதி போன்ற அடிப்படைகளால் ஈர்க்கப்பட்டு, சுற்றுச் சூழல் பற்றிய கரிசனை, பல்வேறு இடங்களுக்கான அணுகல், சமூக உணர்வை வளர்த்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட குடியிருப்புக்களைக் கொண்ட தொகுதியாக இது காணப்படுகிறது. ஸ்மார்ட் நகரமயமாக்கலுக்கு மக்களை மையாகக் கொண்ட திட்டமாக இது அமைந்துள்ளது' என்றார்.

ஜா-எல நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புக்கள், சுப்பர்மார்க்கட்டுக்கள், வங்கிகள், உணவகங்கள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுக்கு இலகுவான அணுகலைக் கொண்டுள்ளன. மேலும், Viman குடியிருப்புத் திட்டமானது கொழும்புத் துறைமுக நெடுஞ்சாலைக்கு அருகாமையில் அமைந்திருப்பதுடன், ஜா-எல மற்றும் கொழும்புக்கு இடையே விதிவிலக்கான இணைப்பை எளிதாக்குகிறது.

பசுமை மிக்க மத்திய தோட்டப்பகுதியில் பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன. நீச்சல் தடாகம், உடற்பயிற்சிக் கூடம், தியான கூடம், கிளப்ஹவுஸ், சிறுவர்கள் விளையாட்டு இடம், சைக்கிள் ஓட்டம் மற்றும் நடைபாதைக்கான இடம், பல்வேறு தேவைகளுக்கான வெளியக விளையாட்டரங்கம், மின்னியல் வாகனங்களுக்கான மின்னேற்ற வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இதில் அடங்குகின்றன.

John Keells Properties நிறுவனம் நவீனத்துவம் மற்றும் நிலைபேறான வாழ்க்கைமுறை ஆகிய இரண்டு விடயங்கள் மீதும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக, Viman குடியிருப்புத் திட்டமானது வலுசக்தி நிறைந்த சூரிய சக்தியால் இயங்கும் வீடுகள் மற்றும் ஏராளமான பசுமையான இடங்கள் மற்றும் வலுவான சமூக உணர்வை வளர்ப்பது போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது.

# லேண்டர், ரோவர் செயல்படும் வாய்ப்பு



நிலவின் தென் துருவத்தில் ஆய்வுப்பணியில் ஈடுபட்ட சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர், ரோவர் கருவிகள் சூரிய சக்தி மூலம் இயங்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டு இருந்தது.

இதனால் லேண்டர், ரோவர் நிலவில் தரையிறங்கிய அடுத்த 14 நாட்களுக்கு தனது பணிகளை திட்டமிட்டபடி செய்து அந்த தகவல்களை இஸ்ராவிற்கு அனுப்பி வைத்தது. பின்னர் நிலவில் இரவுகாலம் தொடங்கியதால் லேண்டர், ரோவர் உறக்க நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது. தற்போது பகல் பொழுது தொடங்கிய நிலையில் அவற்றை உறக்க நிலையில் இருந்து விழிக்க செய்யும் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இது தொடர்பாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறுகையில், லேண்டர், ரோவரிடம் இருந்து இதுவரை எந்த சமிக்ஞையும் இல்லை. ஆனால் அது வராது என்று என்னால் கூற முடியாது. முழு சந்திர நாள் வரையும் (14 பூமி நாட்கள்) நாம் காத்திருக்க வேண்டும். ஏனெனில் அந்த காலம் முழுவதும் சூரிய ஒளி தொடர்ந்து இருக்கும், வெப்பநிலை அதிகரிக்கும் வரை, உள்ளே உள்ள அமைப்புகள் வெப்பமடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே அமைப்புகள் 14 ஆவது நாளில் கூட எழுந்திருக்கலாம். அது எப்போது நடக்கும் என்று கணிக்க வழி இல்லை. 2 கருவிகளும் மீண்டும் செயல்படுவதால் பல நன்மைகள் ஏற்படும். ஏற்கெனவே நாங்கள் செய்த பல சோதனைகள் எங்களுக்கு தரவை வழங்கியுள்ளன, ஆனால் அது காலப்போக்கில் மாறக்கூடும் என்றார்.

மத்தியப் பிரதேசம்




# சர்வதேச அங்கீகாரம் பெற்ற விநாயகர் சிலை

மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூரில் 39 ஆண்டுகள் பழமையான தேங்காய் விநாயகர் என்ற கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் அமைந்துள்ள சிலையானது சிறப்பு வாய்ந்த சக்தியை கொண்டிருப்பதாக போற்றப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள டிரான்ஸ் ஓசனா உலக பதிவுகள் என்ற அமைப்பின் சார்பில் இந்தக் கோவிலுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஒற்றை தேங்காயில் கஜமுக விநாயகர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதையும், 21 ஆண்டுகாலமாக அதில் தேங்காய் நீர் பாதுகாக்கப்பட்டு வருவதையும் கௌரவிக்கும் விதமாக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள விநாயகரை சித்தி விநாயகர் என்றும் அழைக்கின்றனர். இந்த விநாயகர் சிலையை தேங்காயில் வடிவமைத்து 21 ஆண்டுகளில் தலை, கண்கள், காதுகள், கழுத்து போன்றவை வளர்ச்சி அடைந்து ள்ளது குப்பிடத்தக்கது .

மேலும் தேங்காய் விநாயகரை தரிசனம் செய்வதற்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன், நெதர்லாந்து போன்ற உலக நாடுகளிலிருந்தும் பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இந்தியா



# உறுப்பு தானம் செய்வோருக்கு அரசு மரியாதை

“இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் (ட்விட்டர்) பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில் “உடல் உறுப்பு தானத்தின் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது.

தம் உறுப்புகளை ஈழந்து பல உயிர்களைக் காப்போரின் தியாகத்தினைப் போற்றிடும் வகையில் இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்” எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்



# வறுமையில் வாடும் பாகிஸ்தானியர்கள்

பாகிஸ்தான் பாராளுமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டு வரும் ஜனவரியில் பொது தேர்தல் நடைபெறும் என்று அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் புதிய தேர்தலுக்கு முன்னதாக பாகிஸ்தானின் அடுத்த அரசு எவ்வாறு செயல்பட வேண்டும் என வரைவு கொள்கை குறிப்புகளை உலக வங்கி வெளியிட்டு உள்ளது. உலக வங்கி தனது குறிப்புகளில் பாகிஸ்தானின் பொருளாதாரம் பாதாளத்தில் உள்ளதென எச்சரிக்கை விடுத்துள்ளது.
மேலும் கடந்த நிதியாண்டில் பாகிஸ்தானில் வறுமை ஒரு வருடத்திற்குள் 34.2 சதவீதத்தில் இருந்து 39.4 சதவீதமாக உயர்ந்து உள்ளது. 1 1/2 கோடி மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே உள்ளனர். சுமார் 9 1/2 கோடி பாகிஸ்தானியர்கள் வறுமையில் வாடுகிறார்கள்.

விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் மீது வரி விதிக்க அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடையும் முயற்சியில் வீணான செலவினங்களைக் குறைக்க வேண்டும் என உலக வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

சீனா




# 3 வயது சிறுவர்களின் அசத்தலான சமையல்

சமூக வலைதளங்களில் எண்ணற்ற வீடியோக்கள் பகிரப்பட்டாலும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட சில வீடியோக்கள் அதிகம் ரசிக்க செய்யும்.

அந்த வகையில் தற்போது எக்ஸ் தளத்தில் வைரலாகி வரும் வீடியோவில் 3 வயதான சீன சிறுவர்கள் 2 பேரின் சமையல் திறன் பயனர்களை வியக்க வைத்துள்ளது.

நெய்ஜியாங் பகுதியை சேர்ந்த அந்த சிறுவர்கள் சமையல் பாத்திரத்தை பெரியவர்களை போன்று கையாள்கின்ற காட்சிகளை பார்த்து பாராட்டி வருகின்றனர்.




இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# பங்களாதேஷை வீழ்த்திய நியூசிலாந்து

பங்களாதேஷுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 254/10 (49.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டொம் பிளன்டெல் 68 (66), ஹென்றி நிக்கொல்ஸ் 49 (61), இஷ் சோதி 35 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹெடி ஹஸன் 3/45, காலிட் அஹ்மட் 3/60, முஸ்தபிசூர் ரஹ்மான் 2/53, நசும் அஹ்மட் 1/44, ஹஸன் மஹ்மூட் 1/46)

பங்களாதேஷ்: 168/10 (41.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மகமதுல்லா 49 (76), தமிம் இக்பால் 44 (58) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஷ் சோதி 6/39, கைல் ஜேமிஸன் 2/32, கோல் மக்கொஞ்சி 1/3, லொக்கி பெர்கியூசன் 1/28)

போட்டியின் நாயகன்: இஷ் சோதி

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில்

# முதலிடங்களைப் பெற்ற ஆயிஷா மகளிர் வித்தியாலய சுல்பா

எப். முபாரக்

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியின் 100 மீற்றர் ,60 மீற்றர் ஓட்டப் திருகோணமலை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவி எம்.ஐ. சுல்பா முதலிடம் பெற்றுள்ளார்.






# எவரெடி கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

நூருல் ஹுதா உமர்

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் “மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்” எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்த்தார் அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் கலீல் முஸ்தபாவுடன் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது மருதமுனை எவரெடி விளையாட்டுக்கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.
மேலும், இந்நிகழ்வில் எவரெடி விளையாட்டுக்கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை எவரெடி விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கி உதவிய தொழிலதிபர் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தார் ஆகியோருக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் எவரடி விளையாட்டு கழகச்செயலாளர் தெரிவித்தார்.

மலையகத்து மாத்திரமல்ல

# ‘நிதர்ஷனாவின் சாதனை முழு நாட்டுக்கும் பெருமை’

எஸ். சதீஸ்

நாவலப்பிட்டியிலிருந்து பொகவந்தலாவை வரை 54 கிலோ மீற்றர் துாரத்தை எட்டு மணித்தியாலங்களும் 30 நிமிடங்களில் நடந்து சோலன் உலக சானை புத்தகத்தில் இடம்பிடித்த பொகவந்தலாவ சென். மேரிஸ் தேசிய கல்லுாரியின் மாணவி வசந்தகுமார் நிதர்ஷனாவின் சாதனை மலையகத்துக்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் பெருமையைத் தேடி தந்திருக்கிறார் என ஜக்கிய மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சஸூலோவிடம் தோற்றது ஜூவென்டஸ்

இத்தால்லியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சஸூலோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் ஜூவென்டஸ் தோற்றது.

ஜூவென்டஸின் கோல் காப்பாளர் வொஜெக் ஸினெஸ்கியின் தவறுகளாலேயே எதிரணியின் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 25 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.